# திருமணத்தின் நறுமணம்

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

திருமணத்தை குறித்து வேதத்திலே விசேஷமானதொரு ஒரு காரியமாக பேசப்படுகிறது. ஆதியிலே ஆண்டவர் மனிதனை உண்டுபண்ணினபோது, அவன் பாவம் செய்வதற்கு முன்பாக இரண்டு விசேஷமான காரியங்களை ஆண்டவர் இந்த உலத்தின் மக்களுக்கு கொடுத்தார்.

1.**"இவ்விதமாக வானமும் பூமியும், அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன. தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளை எல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளைெ யல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்."**
**–ஆதி 2:1~3**

மணமக்களை ஆசீர்வதிக்கும்படியாக தேவன் விசேஷித்தமாக கொடுத்த ஒரு ஈவு, பரிசுத்த ஓய்வுநாள்! தேவன் அந்த பரிசுத்த ஓய்வுநாள் ஆசரிப்பை, மனிதன் பாவம் செய்வதற்கு முன்னதாகவே தேவனுடைய பிள்ளைகளுக்கு கொடுத்தார்.

2. **"அப்படியே ஆதாம் சகலவித நாட்டுமிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டுமிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள். "** –ஆதி 2:20~25

பாவம் செய்வதற்கு முன்னதாகவே திருமணம் என்ற ஏற்பாட்டை தேவன் இந்த உலகத்திற்கு கொண்டுவந்தார். ஆகவே இந்த பரிசுத்த ஓய்வுநாளையும், திருமணத்தையும் தேவன் கொண்டுவந்தார்.

பரிசுத்த ஓய்வுநாளின் அடையாளம் என்ன? தேவன் மனிதனோடு இணைகிறான், மனிதன் தேவனோடு இணைகிறான் என்பதே.

திருமணத்திலே கர்த்தருக்குள்ளாக ஒரு மனுஷனும், ஒரு மனுஷியும் இணைகிறார்கள். இந்த இரண்டு காரியங்களை குறித்து ஆண்டவர் சொல்லுகிறார்: தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்று சொன்னார். தேவன் இந்த ஏற்பாடுகளையும் பரிசுத்தப்படுத்தினார். ஓய்வுநாள் பரிசுத்தமானதுபோல, திருமணமும் பரிசுத்தமானது.



இந்த இரண்டு விசேஷமான ஏற்பாடுகளையும் ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமாக கொடுத்தார்.

இந்த இரண்டு இணைப்பும் எப்படி ஏற்படுகிறது?

**"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து," – எபேசியர் 5:25**

புருஷனும் மனைவியும் அன்பினால் கட்டப்படுகிறார்கள். அன்பு அவர்கள் இருவரையும் இணைக்கிறது. அன்பின் கயிற்றினாலே அவர்கள் கட்டப்படுகிறார்கள். அதேபோல இறைவனும் நாமும் இணையும்போது, நம்மை ஆண்டவரோடு கட்டுப்படுத்துகிறதும் அந்த அன்புதான்.

ஆண்டவருடைய அன்பை நாம் அறிந்துகொள்ளவேண்டுமென்றால், அன்பானது நம்முடைய குடும்ப ஜீவியத்திலே பிரதிப்பலிக்கவேண்டும் என்று ஆண்டவர் வைத்தார். இன்றைக்கு போலியான அன்பை சாத்தான் இந்த உலகத்திலே வைத்துவிட்டான். அது காமம் என்பதே. ஆகவே அன்பினாலே மக்கள் வாழாதபடி, இன்றைக்கு அசுசியினாலேயும், காமவிகாரத்தினாலேயும் சாத்தான் இந்த உலகத்தின் மக்களை கட்டுவித்திருக்கிறான்.

ஒரு மனிதனும் மனுஷியும் அன்பினாலே கட்டுப்பட்டுவிட்டால், அந்த கட்டானது அவர்களை என்றன்றைக்கும் ஒன்றாக வைத்திருக்கும். மரணம் தவிர மற்ற எதுவுமே அவர்களை பிரிக்கமுடியாது என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆகவே மரணத்திற்கு பிறகும்கூட அந்த அன்பு தொடர்ந்திருக்கும் என்று வேதம் சொல்லுகிறது.

ஆகவே அன்பின் கயிற்றை கணவனும் மனைவியும் முறித்து போடாமல் பாதுக்காத்துகொள்ளவேண்டும்.

அடுத்து,

**"கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக் கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள். இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய். நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்." –சங் 128:1~6**

புருஷனும் மனைவியும் கர்த்தருக்கு பயந்திருக்கவேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. அப்படி பயந்திருந்தால் சகல சமாதானமும், அன்பும், ஆசீர்வாதமும் நமக்கு வரும். அநேக புருஷர்கள் கர்த்தருக்கு பயப்படுவதைவிட மனைவிக்கு பயப்படுகிறார்கள். அநேக மனைவிகள் கர்த்தருக்கு பயப்படுவதைவிட புருஷர்களுக்கு பயப்படுகிறார்கள்.

புருஷனை கண்டு மனைவி நடுங்குவதா? அல்லது மவியை கண்டு புருஷன் நடுங்குவதா?
வேதம் என்ன சொல்லுகிறது?



**“விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்.” –எபிரேயர் 11:7**

இங்கு நோவா பயபக்தியுள்ளவனாகிறதுபோல நாமும் ஒருவொருக்கொருவர் தேவனிடம் பயபக்தியாக இருக்கவேண்டும். ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் பக்தியோடு நேசிக்கவேண்டும். அதே சமயத்திலே ஒருவொருக்கொருவர் ஒருவிதமான தெய்வபயமும் இருக்கவேண்டும். அந்த பயபக்தி குடும்பத்திலேயும் இருக்கவேண்டும். புருஷனிடத்திலே மனைவி பயபக்தியாக இருக்கவேண்டும். புருஷனும் மனையினிடத்திலே பயபக்தியாக இருக்கவேண்டும். ஆகவே இந்த இரண்டுவிதமான கயிற்றுகளினாலே புருஷனும் மனைவியும் கட்டுப்படுகிறார்கள்.
குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டுமென்றால் வேதம் அநேக ஆலோசனைகள் கூறுகிறது.
ஆண்டவர் விவாகத்தை பரிசுத்தமுள்ளதாக உண்டுபண்ணினார் என்று வேதம் சொல்லுகிறது. விவாகம் என்பது ஏதோ ஒரு விளையாட்டு அல்ல!
நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற ஒரு புருஷன், நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற ஒரு மனைவி ஏதோ விளையாட்டு காரியமல்ல. அல்லது புருஷனுக்கு எப்பொழுதும் மெஷின் போல வேலை செய்வது பெண்ணினுடைய இலக்கனமல்ல. அல்லது புருஷனும் மனைவியினிடத்தில் பெரிய அதிகாரத்தை செலுத்தி அவன் தனக்கு அடங்கியிருந்து அடிமைத்தனமாக இருக்கவேண்டுவதுமல்ல. அல்லது மனைவி தன் புருஷனை கைக்குள் போட்டுக்கொள்ளவேண்டும் என்ற கொள்கையுமல்ல. இப்படியாக உலகத்துகுரிய காரியங்களை பின்பற்றாமல், கர்த்தருக்குள் வாழவேண்டும். அப்பொழுது வீடும் முழுவதும் சமாதானமாக இருக்கும்.
நம் வாழ்கையில் போலியான வாழ்க்கை வாழாமல் பரிசுத்தமான வாழ்க்கை வாழ வேண்டும். திருமணம் செய்வதற்கு மூன்று பேர் தேவை. ஆண், பெண், ஆண்டவர் தேவை.
ஆகவே அந்த முக்கோனத்தில் ஒரு ஆண், ஒரு பெண், ஆண்டவர் இல்லாவிட்டால், அந்த ஒரு இணைப்பு இருக்காது. புருஷனும் மனைவியும் சேர்ந்து சமாதானமாகவும் ஆசீர்வாதத்தோடே வாழ்ந்து விட முடியாது. அங்கு மூன்றாவது பேராக ஆண்டவர் தேவைப்படுகிறார். அவர் அந்த புருஷனுக்கும் மனைவிக்கும் நடுவில் இருந்தால்தான், குடும்ப சமாதானமும் ஆசீர்வாதமும் இருக்கும்.
நம் வீட்டிலே “ இயேசுவே இவ்வீட்டின் தலைவர் ” என்று ஒரு எழுதி மாட்டி வைத்திருப்போம். ஆனால் எழுதி வைத்திருபதோடு நிறுத்தி விடுவதா? முனைவி என்ன நினைக்கிறாள், நான்தான் இங்கே தலைவி, என்னுடைய பேச்சைதான் புருஷன் கேட்கவேண்டும். புருஷனோ, இல்லை நான்தான் தலை, என்னுடைய பேச்சைதான் கேட்கவேண்டும் என்று சொல்லுகிறான். மாமியாரும் நான்தான் தலை, மருமகள் என்னுடைய பேச்சைதான் கேட்கவேண்டும் என்று நினைக்கிறார்கள்.
ஒரு சமயத்திலே, ஒரு பிச்சைக்காரன் ஒரு வீட்டிற்கு போய் பிச்சை கேட்டபோது அங்கிருந்த மருமகள் பிச்சை இல்லை என்று சொல்லிவிட்டாள். அவன் அப்படியே



வந்துகொண்டிருந்தபோது மாமியார் கடையிலிருந்து வந்தார்கள். தன்னுடைய வீட்டிலிருந்து அந்த பிச்சைக்காரன் வருகிறதை கண்டு, அவனிடம் அந்த வீட்டில் என்ன நடந்தது என்று கேட்டாள். அவனோ அந்த வீட்டில் பிச்சை கேட்டு கொடுக்கவில்லை என்று சொன்னான். அதற்கு அந்த மாமியார், சரி என்னோடு வா என்று அழைத்து சென்றாள். அங்கு வீட்டிற்கு சென்றபோது மருமகளை கூப்பிட்டு, அந்த பிச்சைக்காரனை நோக்கி: உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டாள். அவனோ, தாயே சாப்பிடுவதற்கு ஏதாகிலும் இருந்தால் கொடுங்கள் என்று கேட்டான். அதற்கு அந்த மாமியார் உனக்கு பிச்சை கிடையாது போ என்று சொல்லிவிட்டாள். அந்த பிச்சைக்காரனுக்கு சற்று குழப்பமாக இருந்தது. என்ன பிச்சை இல்லை என்று முதலில் சொன்னார்கள், பிறகு இந்த அம்மா வா என்று அழைத்துவந்து திரும்ப பிச்சை இல்லை போ என்று சொல்லுகிறார்களே என்று அந்த மாமியாரிடம் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டான். அதற்கு அந்த மாமியார்: இந்த வீட்டில் இருப்பது மருமகள். அவளுக்கு பிச்சை இல்லை என்று சொல்லுவதற்கு அதிகாரம் கிடையாது. இந்த வீட்டிற்கு அதிகாரி நான்தான், ஆகவே நான் உனக்கு சொல்லுகிறேன், பிச்சை கிடையாது போ என்றாள்.
இன்றைக்கு உலகத்தில் வீட்டில் தலை யார்? என்ற கேள்வி இருக்கிறது. தலை என்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே. இதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆகவே திருமணத்தை நாம் சாதாரனமாக எண்ணி, நம்முடைய இஷடம்போல எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்று நாம் நினைக்கவே கூடாது. குடும்பத்தில் சமாதானம் வேண்டும் என்று தினமும் நாம் ஆண்டவரீடம் நாம் கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டும்.
திருமணம் சந்தோஷமாக இருக்கவேண்டுமென்றால் வேதம் என்ன சொல்லுகிறது.

**“இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்.” –மத் 19:5,6**

தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்ககூடாது. அநேக சமயங்களிலே மனைவி புருஷனைவிட்டு ரொம்ப நாளைக்கு தகப்பன் வீட்டிற்கு போயிருந்துவிடுகிறாள்.

திருமணமானவர்கள் கணவனோ மனைவியோ பிரியகூடாது என்று வேதம் சொல்லுகிறது. உபவாசத்திற்காக அன்றி அல்லது பரிசுத்தமான காரியங்களுக்காக அன்றி வேறு எந்தவிதத்திலும் புருஷனும் மனைவியும் பிரியாமல் வாழவேண்டும் என்ற ஒரு ஆலோசனையை வேதம் நமக்கு கொடுக்கிறது.

**“உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடைபிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்.”** ~1 கொரி. 7:5

பொதுவாக புருஷனும் மனைவியும் பிரிந்து வாழ்வது நல்லதல்ல. அப்படி பிரிந்து



வாழும்போது சாத்தான் இடையிலே புகந்து பலவிதமான சேஷட்டைகளையும் உண்டுபண்ணிவிடுகிறான். தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆனால் சாத்தானோ அதற்கு எதிர்மாறாக நான் பிரித்து காட்கிறேன் என்று சவால் விடுகிறான். ஆகவே கனவனும் மனைவியும் பிரிந்திருக்க கூடாது என்று தேவன் சொல்லுகிறார்.

இந்த உலகம் முழுவதும் கனவன் மனைவியின் உறவில் சாத்தான் புகந்து சமாதானமில்லாமல் குலைத்து போடுகிறான். ஏதாகிலும் சிறு பிரச்சனைகள் வந்தாலும் விவாகரத்து வேண்டும் என்று சொல்லும் பெண்களும் ஆண்களும் ஏராளம். சுமாதானமாக வாழவேண்டும் என்று எண்ணத்தோடு இருப்பவர்கள் மிகவும் குறைவுதான். ஒன்றை மட்டும் நம் மனதில் நாம் நிறுத்திவைத்துக்கொள்ளவேண்டும். கனவனுக்கும் மனைவிக்கும் சிறு பிரச்சனைகள் எழ ஆரம்பிக்கும்போதே எப்படியாகிலும் யாராவது அடங்கிபோய்விடவேண்டும். நான்தான் வெற்றியடைவேன் என்று சொல்லி உலகபோர் அளவிற்கு சண்டைபோட்டு கொண்டால், பின்னால் கனவன் அடிப்பதும் அல்லது மனைவியும் அடிப்பதும், தகாத வார்த்தைகளால் திட்டுவதும், மனம் கசந்து அழுவதுமாகதான் இருக்கும்.

ஆகவே இப்படி செய்யாமல் ஓடிபோய் கதவை பூட்டி கொண்டு தேவனிடம் முறையிட்டு சமாதனம் அடைய ஜெபம் செய்யக்கடவோம். அப்படி செய்தால் தேவன் நிச்சயமாக நமக்கு சமாதானம் அடைய கட்டளையிடுவார். புருஷனுக்கும் மனைவிக்கும் சண்டை வந்தால், அது சாத்தானால் வருகிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதை உடைத்தெரிந்து நாம் சாத்தானை விரட்டியடிக்க வேண்டும். அவனை வெற்றியடைய செய்யகூடாது.

ஆகவே நமக்கு இரண்டுவிதமான விசேஷமான காரியங்களுக்கு(கனவன் மனைவி உறவும், தேவனுடைய பரிசுத்த நாளை ஆசரிப்பது) சாத்தான் தடையாகவே இருக்கிறான். நம்மை தேவன் ஆசீர்வதிக்காதபடி சாத்தான் இந்த இரண்டு காரியங்களில் நம்மை சோதனைக்குள்ளாக்கி கெடுத்துபோடுகிறான்.

கர்த்துருடைய பிள்ளைகள் விசேஷமாக தெய்வத்தினுடைய சநிதானத்தை நாடி, காலை மாலை, ஜெபித்து தேவனுடைய சமாதானத்தை பெற்றுக்கொள்ளவேண்டும்.

திருமணமானவர்கள் தங்களுடைய தகப்பனையும் தாயையும் விட்டு, அங்கே மனைவியோடும் புருஷனோடும் இசைந்திருக்கவேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. இன்றைக்கு அநேக குடும்பகளிலே பிரச்சனைகள் வருவதற்கு காரணம், மனைவி தன்னுடைய தாயையும் தகப்பனையும் மறக்கிறதில்லை. புருஷனும் தன்னுடைய தாயையும் தகப்பனையும் மறக்கிறதில்லை. அதற்காக தாயையும் தந்தையையும் மறந்துவிடுங்கள் என்று நான் சொல்லவில்லை. அவர்களை நாம் கனம்பண்ணவேண்டும் என்றுதான் தேவன் சொல்லுகிறார். ஆனாலும் திருமணமானபிறபாடு நமக்கு மனைவியும் கனவனும் விசேஷமானவர்கள் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

ஆகவே கனவனும் மனைவியும் சேர்ந்து தங்கள் தாயையும் தந்தையையும் கனம்பண்ணி அவர்களை ஆதரிக்கவேண்டும். அவர்களின் கடைசிக்காலத்தில் பெற்றோர்களை ஆதரித்து நடத்தவேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமும்கூட. என்றாலும் தாயுக்கும் தகப்பனுக்கும் இல்லாத ஒரு முதலிடத்தை, மனைவி புருஷனுக்கு



கொடுக்கவேண்டும், புருஷன் மனைவிக்கு கொடுக்கவேண்டும்.

அப்படியிருந்தால் குடும்பத்திலே சந்தோஷம் சமாதானம் இருக்கும். இன்றைக்கு மனைவி தன்னுடைய தாய் தந்தை பேச்சை கேட்டுகொண்டு, தன் புருஷனை அவமதிக்கிறதையோ அல்லது தள்ளிவிடுகிறதையோ நாம் பார்க்கிறோம். புருஷன் தன்னுடைய தாய் தந்தை பேச்சை கேட்டுகொண்டு அங்கே மவியை கஷ்டப்படுத்தி கொண்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம். ஆனால் தேவன் ஆலோசனை கொடுப்பதெல்லாம் என்ன?

**“குமாரத்தியே நீ உன் செவியைச் சாய்த்து சிந்தித்துக்கொள்; உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. ”** –சங் 45:10

மறந்துவிடு என்றால், புருஷனும் மனைவியும் திருமணம் ஆவதற்கு முன்பு தங்கள் குடும்பத்தோடு ஐக்கியப்பட்டிருந்ததை விட்டு, இப்போது புருஷனும் மனைவியும் ஒன்றாயிருப்பதுபோல, அவர்கள் இருவர் மட்டும் ஐக்கியப்பட்டிருக்கவேண்டும். ஆகிலும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும் ஆண்டவர் சொல்லியிருக்கிறார்.

இருவருக்கும் எந்த பிரச்சனையானாலும், அவர்கள் இருவர் மட்டுமே கலந்து பேசி, சமாதானம் ஆகவேண்டும். இதுவே இருவருக்கும் உள்ள உண்மையான உறவை குறிக்கும். அவர்களுக்குள்ளேயுள்ள பிரச்சனைகளை வேறு மக்களிடம் சொன்னால், கணவனும் மனைவியும் இங்கு பிரிகிறார்கள். ஏனென்றால் சாத்தான் அங்கு நடுவில் புகுந்து அவர்களை பிரித்து விட பெறும் வாய்ப்பு இருக்கிறது.

தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவது என்று ஆண்டவர் சொன்னார். சாத்தானோ பிரித்து காட்டுகிறேன் என்று சவால் விட்டு கிரியை செய்கிறான்.

**“அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்தியஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.” ~1 பேதுரு 3:7**

இங்கு சொல்லப்பட்டதுபோல, புருஷர்கள் மாதிரி மனைவிகள் பெலசாலிகளல்ல. மனைவி இரண்டு, மூன்று, நான்கு பிள்ளைகளை பெற்றெடுக்கும்போது, அவள் பெலவீனப்பட்டு போகிறாள். ஆகவே மனைவி பெலவீனமான பாண்டம் என்று ஆண்டவர் சொல்லுகிறார். அந்த மனைவியினிடத்தில் அக்கறையில்லாமல் கொடூரமாக நடந்துக்கொண்டிருந்தோமென்றால், உங்கள் ஜெபத்திற்கு தடை வரும் என்று ஆண்டவர் சொல்லுகிறார். மனைவியை அதிகமாக கொடுமைப்படுத்துகிறவர்கள், மனைவியை நேசிக்காத கணவன் செய்கிற ஜெபம் கேட்கப்படாது என்று வேதம் சொல்லுகிறது. மனைவி பெவலீனமான பாண்டமாயிருப்பதால், அவர்களிடம் பேசும்போதும், அவர்களிடம் நடந்து கொள்ளும் ஒவ்வொரு காரியத்திலும், நாம் சற்று நிதானிக்கவேண்டும். கோபத்தினால் அடித்து உதைப்பதும், திட்டுவதும், கண்மூடித்தனமாக பேசுவதும் யாவையும் நாம் ஒதுக்கிவிடவேண்டும்.



தன் புருஷனுக்காக தன் உயிரையே பணயம் வைத்து குழந்தை பெற்றெடுக்கும் மனைவி, எவ்வளவு கஷ்டப்படுகிறாள்! எவ்வளவு பெலவீனமடைகிறாள். அதோடு குடும்பத்தின் பலவிதமான காரியங்களை செய்து கொண்டு, அவர்கள் கஷ்டப்படும்போதும், துன்பப்படும்போதும், கணவன்கள் தாங்கி ஆதரவு கொடுத்து, அன்புக்காக பாராட்டவேண்டுமே தவிர, கொடூரமாக, கடினமாக அவர்களை நடத்தக் கூடாது.

**மனைவி என்னுடையவள், நான் அவளை என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்ற குணம் நமக்கு இருக்கக்கூடாது.**

சங்கீதம் 128 முழுவதுமே குடும்பத்தை பற்றி பேசுகிறது.

**“கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சச்செடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள். இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய். நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய். ”**

இங்கு கர்த்தருக்கு பயப்படுவது என்றால் என்ன? ஆண்டவர் நமக்கு முதன்மையாக இருக்கவேண்டும். அவர் நம்முடைய வீட்டுக்கு தலைவராக இருக்கவேண்டும். காலையும் மாலையும் இரவிலும் நாம் வேலை செய்துவிட்டு வந்து சாப்பிட்டுவிட்டு தூங்கிவிடுகிறோம். ஆனால் நாம் கர்த்தரிடம் ஜெபம் செய்வதே கிடையாது. நாம் காலையிலேயும் இரவிலேயும் ஜெபம் பண்ணாமலிருந்தால், நம்முடைய பிள்ளைகளும் அப்படியே இருப்பார்கள். பிள்ளைகள் நமது வீட்டிலேயே இருக்கும்போது, அவர்களை கடவுளிடம் வழி நடத்தவேண்டும் என்ற மாபெரும் கடமை நமக்கிருக்கிறது. நாம் வேதம் வாசிப்பதையும், ஜெபம் செய்வதையும் அந்த பிள்ளைகள் பார்த்து தானாகவே பின்பற்றும்.

நானும் என்னுடைய மனைவியும் காலையில் எழுந்து முழங்காற்படியிட்டு வேதம் வாசிப்போம். அப்பொழுது எனக்கு ஒரு மகள் பிறந்தபொழுது, வீட்டில் நிறைய பொம்மைகள் இருக்கும். ஆனால் என்னுடைய மூத்தமகள் நான் வாசிக்கும் என்னுடைய வேதபுத்தகத்தைதான் கைகளில் எடுத்து கொள்வாள். அவளுக்கு வாசிக்க தெரியாது, ஆனால் முழங்காற்படியிட்டு ஏதோ செய்வாள்.

பெற்றோர்கள் பிள்ளகைளுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும். நாம் அவர்களுக்கு முன்பாக ஜெபம் செய்தால்தான் அவர்களும் செய்வார்கள். நாம் ஜெபம் செய்யாமல் அவர்களை ஜெபம் பண்ணு என்று சொன்னால், எப்படி செய்வார்கள்? நாம் வேதம் வாசித்தால்தான் அவர்களும் வேதம் வாசிப்பார்கள். பிள்ளகளுக்கு முன்பாக நாம் பயபக்தியாக இருக்கவேண்டும். பிள்ளைகளை ஆலயத்திற்கு அழைத்து சென்று பழக்கப்படுத்துங்கள். அவர்களுக்கு காணிக்கைகளை கொடுத்து அவர்கள் கைகளாலே போட சொல்லுங்கள். பிள்ளைகளுக்கு தேவ பாட்டுக்களை சொல்லிகொடுங்கள். பிள்ளைகளுக்கு வேதவசனங்களை மனப்பாடம் செய்ய சொல்லுங்கள். இந்த மாதிரியான காரியங்கள்தான் கர்த்தருக்கு பய்ப்படுகிறது என்று பொருள்படும்.



அப்பொழுது அந்த பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிவார்கள். அந்த பிள்ளைகளினாலே பெற்றோருக்கு எந்தவிதமான தொந்திரவும் இருக்காது. கர்த்தருக்கு பயப்படுகிற பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிவார்கள். ஆண்டவரும் அவர்களை வழிநடத்துவார். அந்த பிள்ளைகள் பின்னான காலங்களிலே, பெற்றோர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பார்கள்.

**“உன் ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு. அவளே நேசிக்கப்படத்தக்க பெண்மானும், அழகான வரையாடும் போலிருப்பாளாக; அவளுடைய ஸ்தனங்களே எப்பொழுதும் உன்னைத் திருப்திசெய்வதாக; அவளுடைய நேசத்தால் நீ எப்பொழுதும் மயங்கியிருப்பாயாக.” –நீதி:5:18,19**

மனைவி பார்க்க அழகாக இல்லை என்று வைத்து கொள்வோம். அல்லது கணவன் பார்க்க அழகாக இல்லை என்று வைத்து கொள்வோம். இந்த உலகத்தில் நாம் வாழபோவது 70 அல்லது 80 ஆண்டுகள்தான். ஆனால் பாவம் முடிந்தபிறகு, தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய ராஜியத்திற்கு போகும்போது, நாம் தேவதூதர்களைபோல மிகவும் அழகாக இருப்போம். இன்றைக்கு நம்முடைய மனைவி கருப்பாக பற்கள் நீட்டிகொண்டிருந்தாலும், அன்று நாம் ஜொலிக்கிறவர்களாக இருப்போம். ஆகவே இந்த உலகத்தில் நாம்

திருமணம் செய்யும் மனைவியோடுதான் பரலோகத்தில் நாம் வாழப்போகிறோம். அங்கு இன்னொரு மனைவி கொடுக்கப்படாது.
ஒரு புருஷனும் மனைவியும் எப்பொழுதும் சந்தோஷமாக இருந்தார்கள். அவர்களுக்கு 90 வயதானது. அவர்கள் அறுபதாம் கல்யாணம் கொண்டாடும்போது, ஒரு நிருபர் வந்து அவர்களிடம்: இத்தனை வருஷக்காலமாக உங்கள் மனைவியோடு சந்தோஷமாக சமாதானமாக இருக்கிறீர்களே, அதோடே தார்ப்பரியம் என்ன? என்று கேட்டார். அப்பொழுது அந்த புருஷனும் மனைவியும் : நாங்கள் கட்டியிருக்கிற கைகடிகாரம்தான்(வாட்சு) அதற்கு காரணம் என்றார்கள். உடனே அந்த கைகடிகாரத்தை கழற்றி அந்த நிருபரிடம் காட்டினார்கள். அந்த கைகடிகாரத்தில் ஒரு வசனம் எழுதியிருந்தது: சாராள் செய்கிற நல்ல காரியத்தை எப்பொழுதும் நினைத்து கொள். சாராள் அந்த மனைவியுடைய பெயர். அந்த கைகடிகாரத்தை அவர் பார்க்கும்போதெல்லாம் அந்த வசனத்தை படிக்கும்படியாக ஆகும்.
ஒரு இடத்திற்கு விருந்திற்கு போகும்போது நிறைய அரசியல்வாதிகள் வந்தார்கள். அந்த மனிதனுடைய வீட்டில் நிறைய ரோஜா செடிகள் இருந்தது. அந்த மனிதர் பேசிக் கொண்டே கொஞ்சம் கவனக்குறைவாக ரோஜா பூவை பறித்ததினால் அதிலுள்ள முட்கள் ஆழமாக குத்திவிட்டது. அதற்கு அந்த மனிதர்: என்னய்யா கடவுள் இவர், ஞானமுள்ள கடவுள் என்று சொல்லுகிறார்களே! இத்தனை அழகான பூச்செடியிலே இவ்வளவு கூர்மையான முள்ளை வைத்துவிட்டாரே என்று கடவுளை குறித்து நொந்துகொண்டார். அதேபோல இன்னொருவருக்கும் ரோஜா பூவை பறிக்கும்போது முள் குத்திவிட்டது. அதற்கு அவர் இத்தனை கடினமான முள்செடியிலே ஆண்டவர் அழகான பூவை வைத்திருக்கிறார் என்று சொன்னார்.



இன்றைக்கு உலகத்தின் மக்கள் இரண்டு பிரிவாக இருக்கிறார்கள். உலகத்தின் நடக்கும் கஷ்டங்களையும் துன்பங்களையும் பார்த்து, ஆண்டவர் மேல் குறை சொல்லுகிறார்கள். என்ன ஆண்டவர் இவர், அன்புள்ள ஆண்டவர்தானா? ஞானமுள்ள ஆண்டவர்தானா? இவ்வளவு துன்பங்களையும் துயரங்களையும் எதற்காக ஆண்டவர் கொடுக்க வேண்டும்? ஆனால் இன்னொரு கூட்டத்தார் சொல்லுகிறார்கள்: இந்த பயங்கரமான உலகத்தில் ஆண்டவர் தங்களுக்கு கொடுத்திருக்கிற விசேஷமான அந்த ஆசீர்வாதங்களை நினைத்து, இவ்வளவு துன்பத்திலும் துயரத்திலும் ஆண்டவர் நமக்கு சமாதானம் கொடுத்திருக்கிறாரே! சந்தோஷம் கொடுத்திருக்கிறாரே!
இன்றைக்கு சென்னையில் ஐம்பதாயிரம் பேர் ரோட்டிலே படுத்து கொண்டிருக்கிறார்கள். நாம் கர்த்தரின் கிருபையினாலே ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம். உலகத்தின் மூன்றில் ஒரு பங்கு பசியால் வாடிகொண்டிருக்கிறார்கள். நாமோ தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இன்றைக்கு உடையில்லாதவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? நமக்கு அந்த நிலைமையை ஆண்டவர் வைக்கவில்லையே! நண்மையான காரியங்களை குறித்து சந்தோஷப்படவேண்டும்.
கணவனும் மனைவியும் பலநேரங்களில் நண்மைகளும் செய்வார்கள், அதே நேரத்தில் தீமைகளும் செய்யலாம். நாம் நண்மைகளையே பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் இருவருக்குமிடையே நல்ல சமாதானம் இருக்கும். இவன் தீமை செய்துவிட்டானே அல்லது இவள் தீமை செய்துவிட்டாளே என்று சொல்லிகொண்டேயிருந்தால் சமாதானம் இருக்காது. சந்தோஷமாக இருக்கவேண்டும் என்றால், மனைவி செய்யும் நல்ல காரியங்களே நாம் பார்க்கவேண்டும். அல்லது கணவன் செய்யும் நல்ல காரியங்களே பார்க்கவேண்டும். கெட்டகாரியங்களை நாம் பார்க்கக்கூடாது. அப்பொழுது அந்த குடும்பத்திலே சந்தோஷம் மிகுதியாய் இருக்கும்.
மனைவியினிடத்திலும் கணவனிடத்திலும் அன்பாக பேச கற்றுக்கொள்ளவேண்டும். நம் நாவிலே அன்பான வார்த்தைகள் இருக்கிறது. அப்படி பேசுவதை விட்டுவிட்டு, கடினமான கோபமான வார்த்தைகளால் பேசுவது மனக்கஷ்டத்தை கொடுக்குமே. அந்த வார்த்தைகளை யாரிடமும் பேசினால் அவர்களுக்கு துக்கத்தைதான் கொடுக்கும், கோபத்தையும் தூண்டும். இன்றைக்கு நம்முடைய ஜீவியத்தில் நாம் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்றால், அன்பான வார்த்தைகளால் பேசவேண்டும். மனைவியை மதித்து நடந்து கொள்ளுங்கள், மற்றவர்களுக்கு முன்பாக அவமதிக்காதீர்கள். அவர்களை தலைகுனிய வைக்காதீர்கள். அந்தபடியே புருஷர்களையும் மதித்து நடங்கள். அவர்களை மதிக்காமல் பேசிவிடாதீர்கள். தேவன் எல்லாவற்றையும் குறித்து வைக்கிறார். புருஷருனுக்கு பல சிந்தனைகள் இருக்கும். அதை பாராமல் மனைவிமார்கள் அவர்களை துக்கப்படுத்தும்படி மனம் நோகும் வார்த்தைகளால் பேசாதீர்கள். அவர்கள் அதனாலேயே மனம் நொந்து நோயுள்ளவர்களாவார்கள். அதேபோல மனைவிகளையும் புருஷர்கள் சாந்தமான வார்த்தைகளால் பேசி அன்பு காட்டவேண்டும்.
நான் திருமணமானபோது எனக்கு 19 வயதும் என் மனைவிக்கு 15 வயதுமானது. அப்பொழுது ஊழியம் செய்ய வருகிறவர்களுக்கு ஒரே வருஷத்திலே கல்யாணம் ஆகவேண்டும். என்ற ஒரு கட்டளையிருந்தது. நான் பதினெட்டு வயதிலேயே என்னுடைய ஊழியத்தின் படிப்பை முடித்துவிட்டேன். என் மனைவிக்கு வெங்காயம்



வெட்ட மட்டும்தான் தெரியும். மற்ற சமயல் வேலை எதுவும் தெரியாது. நாங்கள் தனி குடித்தனம் போனோம். என்னுடைய மனைவியின் அக்கா மிகவும் நன்றாக சமைப்பார்கள். அதனாலே என் மனைவி ஒரு நோட்புக்கை எடுத்து கொண்டு எல்லா சமையல் காரியங்களையும் எழுதி வைத்திருந்தார். ஒரு நாள் அந்த நோட்புக்கை பார்த்து ஒரு சமையல் செய்தார். குழம்பு செய்ய வானலில் எண்ணையை போடு என்று போட்டிருக்கிறதுபோல எண்ணையை ஊற்றினார். பிறகு வெங்காயத்தை போடு என்று எழுதியிருக்கிறது. உடனே வெங்காயத்தை உரித்து அதை வெட்டி கொண்டு போடுவதற்குள் அங்கு எண்ணை அதிகமாக

காய்ந்துவிட்டது. இந்த வெங்காயத்தை போட்டவுடன் கருப்பாய் போய்விட்டது. முதல் முதலாக குழம்பை கொண்டு வந்து சோற்றில் ஊற்றினார். வாயில் வைக்கமுடியாமல் போய்விட்டது. ஒரே சகப்பு, என்ன செய்வது? சரி அவள் மனம் புன்படகூடாது என்று என்ன அருமையாக குழம்பை வைத்திருக்கிறாய்! என்று பாராட்டினேன்! ஆனால் இன்று அன்றையவிட மிக அருமையாக குழம்பு வைப்பதில் கைதேர்ந்தவராக இருக்கிறார்.

மனைவியை பாராட்டவேண்டும். அன்பான வார்த்தைகளை சொல்லுங்கள். கணவனையும் பாரட்டுங்கள். அப்பொழுது சந்தோஷமாயிருப்போம். கடினமான வார்த்தைகளை சொல்லாதீர்கள். மனைவியையும், எந்த பெண் குழந்தைகளையும் மற்றவர்களுக்கு முன்பாக திட்டாதீர்கள். உறவினர்கள் வரும்போது அவர்களுக்கு முன்பாக மனம் நோகும்படி திட்டாதீர்கள். அவர்களை மட்டப்படுத்தாதீர்கள். அப்படி செய்தால் உங்கள் மனைவி உங்களுக்கு விரோதியாக மாறிவிடுவாள். இந்த காரியங்கள் கொஞ்சம்கூட மனைவிமார்களுக்கு பிடிக்காது. மற்றவர்களுக்கு முன்பாக மனைவியை மதித்து பேசுங்கள். அவளுடைய நல்ல குணத்தை சொல்லுங்கள். அப்போது அவள் உங்களுக்கு ரொம்பவும் உண்மையாக இருப்பாள். உங்களிடம் அதிகமாக பாசமும் அன்பும் வைப்பாள்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சவப்பெட்டி இருக்கவேண்டும் என்று ஒருவர் எழுதியிருந்தார். அன்றன்றைக்கு புருஷனுக்கும் மனைவிக்கும் வரும் சண்டைகளை அந்த சவப்பெட்டியில் போட்டு புதைத்துவிடவேண்டும். அப்படி சவப்பெட்டியில் போட்டு புதைத்தால்தான் அது மேலே வராது. பத்து வருடத்திற்கு முன்பு நடந்த காரியங்களை மனைவி சரியாக ஞாபகம் வைத்துகொண்டு: நீங்கள் அன்று என் குடும்பத்தை பற்றி கேவலமாக பேசினீர்களே நான் மறந்துவிட்டேன் என்று நினைத்தீர்களா? என்று கேட்பாள். புருஷனும் ஐந்து வருடத்திற்கு முன்பு நடந்த காரியத்தை நினைத்து, அன்று நீ என்னை மற்றவர்களுக்கு முன்பாக அவமதித்து பேசிவிட்டாயே ஞாபகம் இருக்கிறதா? நான் மறக்கவில்லை. என்று சொல்லுவான். ஆகவே எது நடந்தாலும் அவைகளை நாம் அன்றே மறந்துவிடவேண்டும். அன்றே புதைத்து போட்டுவிடவேண்டும்.

என்ன காரியங்கள் நடந்தாலும், மனவேற்றுமைகள், கோபதாபம், பற்பலவிதமான காரியங்கள் யாவையும் அந்த சவப்பெட்டியிலே புதைத்துவிடவேண்டும். உன்னுடைய மனைவியை மன்னித்துவிடு அவள் உன் சரீரம். உன்னுடைய கணவனை மன்னித்துவிடு அவன் உன் சரீரம். இருவரும் ஒன்றே என்று வேதம்



கூறுகிறது.

கிறிஸ்தவர்கள் யாவரும் மன்னித்து மறந்துவிடவேண்டும். நாம் பிறரை மன்னித்தால்தான் ஆண்டவரும் நம் பாவங்களை மன்னிக்கிறார். அவர் நம் பாவங்களை மறக்கிறதோடு அல்லாமல் அவைகளை கிரிக்கிபோடுகிறார். அப்படி ஆண்டவர் அவைகளை நினையாமல் இருக்கிறபடியால்தான் நாம் பரலோகத்திற்கு போகமுடியும். அதேபோல அவர் தம்முடைய பிள்ளைகளிடத்திலேயும் எதிர்ப்பார்க்கிறார். மற்றவர்களின் பாவங்களை மன்னிக்கவேண்டும். சகோதரன் பாவம் செய்தாலும், மனைவி பாவம் செய்தாலும், புருஷன் பாவம் செய்தாலும் மன்னித்துவிடுங்கள்.

ஒரு திருமண தம்பதியினருக்கு ஒரு பெரிய பார்சல் வந்தது. அதை பிரித்தார்கள். அதற்குள்ளே இன்னொரு பார்சல் இருந்தது. அதையும் பரித்தார்கள். இப்படியாக பிரிக்க பிரிக்க பார்சல் வந்து கொண்டேயிருந்தது. கடைசியாக ஒரு காகிதம் இருந்தது. அதில் : இந்த பார்சலை பிரிப்பதற்கு எவ்வளவு பொறுமையாக பிரித்தீர்களோ, அந்தமாதிரியான பொறுமையை உங்கள் வாழ்க்கையிலே அனுபவியுங்கள் நீங்கள் சந்தோஷ மாயிருப்பீர்கள் என்று எழுதியிருந்தது. பொறுமை நமக்கு அவசியம் தேவை. எல்லாவற்றிலும் பொறுமை வேண்டும்.

**“அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?”** ~2 கொரி. 6:14

நாம் கடவுள் பக்தியுள்ள பிள்ளைகளாக இருந்தால், நம்முடைய மகனுக்கும் மகளுக்கும் கடவுள் பக்தியுள்ள மகனை தேர்ந்தெடுக்கவேண்டும். சில நேரத்திலே கிறிஸ்தவர்கள் இந்துக்களையும் முஸ்லீம் கிறிஸ்தவர்களையும் கல்யாணம் செய்துகொள்ளுகிறார்கள்.

இப்படி கலப்படமாக கல்யாணம் நடக்கும்போது, அவர்களின் எண்ணத்திற்கும் நமது எண்ணத்திற்கும் வித்தியாசம் வேறுபாடுகள் இருக்கிறது. அப்படிப்பட்ட வேறுபாடுகளுடன் கல்யாணம் செய்தால் வாழ்க்கை சுகமாக இருக்காது. இன்று காதல் என்ற நோயால் பலதரப்பட்ட கலப்பட கல்யாணம் நடக்கிறது. அப்படி செய்பவர்களுக்கு தேவன் கேட்கிறார்: நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது என்று கேட்கிறார்.

ஆண்டவர் வருவதற்கு முன்னதாக நாம் மரித்தாலும், ஒரு வேலை அவர் வருவதற்கு முன்பு நாம் உயிரோடிருந்தாலும், தாயும் தகப்பனும் பிள்ளைகளும் தேவனுடைய ராஜியத்திற்கு போகவேண்டும். நாம் சுத்த இருதயத்தோடே இருந்தால் அவர் வரும்போது அவரோடு நம் குடும்பத்தோடு போகவேண்டும். மனைவி கணவன் பிள்ளைகள் யாவரும் ஒன்றாக போகவேண்டும். அந்த பரலோகத்திலே அனைவரும் ஒன்றாய்கூடி சந்தோஷமாய் இருக்க இன்று நாம் வாழும் வாழ்க்கையில்தான் இருக்கிறது. உண்மையானபடி அன்போடு உங்கள் மனைவியை நேசியுங்கள். உண்மையானபடி அன்போடு உங்கள் புருஷனை நேசியுங்கள். பிள்ளைகளை நன்றாய் வளர்த்துவிடுங்கள். யாராவது தவறிவிட்டார்கள் என்றால், அந்த பரலோகத்தை பார்க்கிற பெற்றோர்கள் பிள்ளைகள் இல்லையே என்று அழுவார்கள். ஆயிரம் வருஷம் பரலோகத்திலே நாம் இருக்கும்போது, நம்முடைய மனைவி வரவில்லை, கணவன் வரவில்லை, பிள்ளைகள் வரவில்லை என்றால், ஆராத துயரமிருக்கும். அப்பொழுது அழுவார்கள். திருமறை சொல்லுகிறது. கர்த்தர் அவர்களின் கண்ணீரை துடைப்பார்.

அவர் கண்ணீரை துடைத்தாலும், நம் பிள்ளைகள் போனது போனதுதான். மனைவி போனது போனதுதான். கணவன் போனது போனதுதான். ஆகவே இன்றே தவணையின் காலம், இன்றே இரட்சிப்பின் காலம், மனந்திரும்புவோம். –

எப்படியாவது நம்முடைய மனைவி, கணவன், பிள்ளைகள் பரலோகத்திற்கு வரவேண்டும். வரவேண்டும்.
பரிசுத்த ஜீவியம் செய்வோம்!
ஒருவருகொருவர் சமாதானம் ஆகி அன்பு செலுத்துவோம்!
பிள்ளைகள் யாவரையும் பரிசுத்தமாய் வளர்ப்போம்!
கணவன் மனைவி சண்டைபோடாமல் சமாதானமாக இருப்போம்.

யாவரும் பரலோக ராஜியத்திற்கு வந்து சேருவோம் ~ ஆமென்

